பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 07 2025 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - இங்கிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இன்று கையெழுத்தாக உள்ளது.

2. நாட்டில் மின்னணு பொருட்களின் உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளில் 6 மடங்கு அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. நாட்டில் ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் நிலையங்களின் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கும் பணிகளை அரசு மேற்கொண்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

4. தெலங்கானாவில் நேற்று சில மாவட்டங்களில் பெய்த கனமழை காரணமாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

5. ஃபிடே மகளிர் உலகக் கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இங்கிலாந்து சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று அந்நாட்டுப் பிரதமர் திரு. **Keir Starmer** உடன் இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம், புதுமைக் கண்டுபிடிப்புகள், பருவநிலை, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து அவர்கள் பேச்சு நடத்த உள்ளனர்.

பிரதமர் பயணத்தின் முக்கிய அம்சமாக இரு நாடுகளுக்கிடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது.

இருநாட்டுப் பிரதமர்கள் முன்னிலையில் நடைபெற உள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயலும், இங்கிலாந்து வர்த்தக அமைச்சர் திரு. **Jonathan Reynolds**-ம் கையெழுத்திட உள்ளனர்.

இன்று மாலை பிரதமர் திரு. மோடி, மூன்றாம் சார்லசை சந்தித்துப் பேசவுள்ளார்.

முன்னதாக இரண்டு நாள் பயணமாக இங்கிலாந்து சென்றுள்ள திரு. நரேந்திர மோடி நேற்றிரவு லண்டன் சென்றடைந்தார்.

அங்கு அவரை இந்திய வம்சாவளியினர் உற்சாகமுடன் வரவேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாட்டில் ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் நிலையங்களின் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கும் பணிகளை அரசு மேற்கொண்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், இதற்காக கடந்த 5 ஆண்டுகளில் 2 ஆயிரத்து 539 கோடி ரூபாய் அளவிற்கு செலவிட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் நாட்டில் ஒரு லட்சத்து 55 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தக வெளியீடு நிறுவனங்கள் உள்ளதாகவும், 908 தனியார் தொலைக்காட்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தூர்தர்ஷனின் இலவச டிஷ் சேவை மூலம் 92 தனியார் தொலைக்காட்சி அலைவரிசைளும், 50 தூர்தர்ஷன் அலைவரிசைகளும் ஒளிபரப்பப்படுவதாக டாக்டர் எல். முருகன் கூறினார்.

<<<<>>>>

நாட்டில் மின்னணு பொருட்களின் உற்பத்தி கடந்த 10 ஆண்டுகளில் 6 மடங்கு அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், கடந்த நிதியாண்டில் மின்னணுப் பொருட்களின் உற்பத்தி 11 லட்சம் கோடி ரூபாயை கடந்தது என்று கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் 3 லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மின்னணு் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு மொபைல் ஃபோன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. ஜிதின் பிராசாதா தெரிவித்தார்.

<<<<>>>>

சீன குடிமக்களுக்கு இன்று முதல் சுற்றுலா விசா வழங்கப்படுகிறது.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பெய்ஜிங்கில் இந்திய தூதரகம், 5 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய சுற்றுலா விசா சீன மக்களுக்கு வழங்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளது.

இதற்காக தேவையான ஆவணங்களை பெய்ஜிங், ஷாங்காய், குவாங்சோவில் உள்ள இந்தியா விசா அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

பங்களாதேஷ் விமான விபத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக இந்தியா மருத்துவக் குழு நேற்று மாலை டாக்கா சென்றடைந்தது.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இக்குழுவில் 2 சிறப்பு மருத்துவர்களும், செவிலியர் உதவியாளர்களும் இடம்பெற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு மருத்துவர்கள் புதுதில்லி ராம் மனோகர் லோகியா மருத்துவமனை மற்றும் சஃப்தர்ஜங் மருத்துவமனையைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்துள்ளது.

அவர்கள் இன்று காலை முதல் விமான விபத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க தொடங்குவார்கள் என்று கூறியுள்ளது.

கடந்த 21ஆம் தேதி பங்களாதேஷில் நிகழ்ந்த விமான விபத்தில் காயமடைந்தவர்களுக்கு தேவையான அனைத்து உதவியும் வழங்கப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதியளித்திருந்த நிலையில், இம்மருத்துவக் குழு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

நாடு முழுவதும் பழங்குடியினர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக 479 ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருவதாக பழங்குடியினர் நலத்துறை இணையமைச்சர் திரு. துர்காதாஸ் உய்கே தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், இப்பள்ளிகளில் ஒரு லட்சத்து 38 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருவதாக கூறினார்.

நவோதயா வித்யாலயா பள்ளிகளுக்கு இணையாக அனைத்து வசதிகளுடன் இருக்கும் நோக்கில் இப்பள்ளிகள் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மொத்தம் 728 ஏகலைவா பள்ளிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அனைத்து அமைச்சகங்களும், பழங்குடியினர் நலனுக்காக குறிப்பிட்ட சதவீத நிதியை ஒதுக்குவதாகவும் திரு. துர்காதாஸ் உய்கே கூறினார்.

<<<<>>>>

ரஷ்யா – யுக்ரைன் இடையே மூன்றாது சுற்று அமைதிப் பேச்சுகள் துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் நேற்று நடைபெற்றது.

அப்போது இரு நாடுகளின் கைதிகளை பரிமாறிக்கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டது.

ஆகஸ்ட் மாதத்திற்கு முன்பாக யுக்ரைன் அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலன்ஸ்கியும், ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடினும் சந்தித்துப் பேச வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

உயிரிழந்த 3 ஆயிரம் யுக்ரைன் வீரர்களின் உடல்களை ஒப்படைக்க ரஷ்யா தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

<<<<>>>>

இந்தியாவில் பெட்ரோலுடன் 20 சதவீதம் அளவுக்கு எத்தனால் கலப்பு செய்யப்பட்டுள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

5 ஆண்டுகளுக்கு முன்னதாகவே இதற்கான இலக்கு எட்டப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இதன் மூலம் அன்னிய செலாவணியில் ஒரு லட்சத்து 36 ஆயிரம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் விவசாயிகளுக்கு ஒரு லட்சத்து 18 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பெட்ரோலுடன் எத்தனால் கலப்பு மூலம் 698 லட்சம் டன் அளவிற்கு கார்பன்-டை-ஆக்சைடு வெளியீடு குறைக்கப்பட்டுள்ளதாகவும் திரு. ஹர்தீப் சிங் புரி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் நடப்பு கல்வியாண்டில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஹோமியோபதி மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என்று இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையரகம் அறிவித்துள்ளது.

இணையதளம் வாயிலாக மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்றும், இதற்கான தகவல்களை **www.tnhealth.tn.gov.in** மற்றும் **www.tnayushselection.org** என்ற வலைதளங்களின் மூலம் அறிந்துகொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்க அடுத்த மாதம் 8ஆம் தேதி கடைசி நாளாகும்.

<<<<>>>>

தெலங்கானாவில் நேற்று மிக கனமழை பெய்தது.

இதன் காரணமாக சாலைகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. ஏரிகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

சில பகுதிகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக அசிஃபாபாத் மாவட்டத்தில் உள்ள பெஜூர் பகுதியில் கடந்த 24 மணி நேரத்தில் 236 புள்ளி 5 மில்லி மீட்டர் மழையும், முளுகு மாவட்டத்தில் உள்ள வெங்கட பூர்மா பகுதியில் 218 புள்ளி 3 மில்லி மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது.

பொதுமக்கள் அதிக நீர் செல்லும் பாலங்கள் மற்றும் நெடுஞ்சாலைகளில் பயணம் செய்வதை தவிர்க்க வேண்டும் என்று முளுகு மாவட்ட ஆட்சியர் திரு. திவாகர் அறிவுறுத்தியுள்ளார்.

மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கோதாவரி ஆற்றின் அருகே தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள்

பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்காக அரசு சார்பில் தங்குமிடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பழைய வீடுகளில் வசிப்போர் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே கர்நாடக கடலோரப் பகுதி, கோவா, மகாராஷ்டிராவின் மத்தியப் பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தில்லி, சண்டிகட், ஹரியானா, ஜம்மு-கஷ்மீர், பீஹார், குஜராத், மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த 2 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஃபிடே மகளிர் உலகக் கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஜார்ஜியாவின் பதுமி நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதிச் சுற்றின் 2வது ஆட்டத்தில் அவர், சீனாவின் **Tan Zhongvi**-ஐ வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் ஃபிடே மகளிர் உலகக் கோப்பை செஸ் போட்டியின் இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய முதல் இந்தியர் என்ற பெருமையை திவ்யா தேஷ்முக் பெற்றுள்ளார்.

------------

இங்கிலாந்து அணிக்கு எதிரான 4வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் இந்தியா தமது முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 264 ரன் எடுத்தது.

மான்செஸ்டரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் சாய் சுதர்ஷன் 61 ரன்னுக்கும், ஜெய்ஸ்வால் 58 ரன்னுக்கும் ஆட்டமிழந்தனர்.

ஷர்துல் தாக்கூர், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா 19 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் பென் ஸ்டோக்ஸ் 2 விக்கெட்டையும், க்ரிஸ் ஓக்ஸ், லியாம் டாசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தியுள்ளனர்.

--------------

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியின் இந்தியாவின் தன்வீ ஷர்மா மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் அவர், 21-6, 21-6 என்ற செட் கணக்கிகல் ஐக்கிய அரபு எமிரேட்டின் வைதேகி காளிதாசனை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Ansh Negi, Pranav Ram Nagalingam** ஆகியோரும் மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் விஷ்ணு கேதர் கோடே – கீர்த்தி மன்சலா இணை 3வது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**<<<<The End>>>>**